# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 14316/SCIC/2024**

திரு. M. விஜயன் - மேல்முறையீட்டாளர்
எண்.03/13, 4-வது தெரு
கருணாநிதி நகர், தண்டையார்பேட்டை
சென்னை-600 081.
கைபேசி.9003033965.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து வடக்கு
போக்குவரத்து திட்டமிடல் பிரிவு
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை - 600 007.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **15.05.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.06.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 03.07.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 03.09.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 14.11.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 15/05/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகம், சென்னை-7 அவர்களுக்கு அனுப்பி, அதில் “சென்னை மாநகர சாலைகளில் செல்லும் தண்ணீர் லாரிகள் (Water Tank lorry) பின்பற்ற

வேண்டிய விதிமுறைகளை தகவல்களாக தர வேண்டுகிறேன் " என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு. M. விஜயன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.R.விஷ்ணு, காவல் உதவி ஆய்வாளர், போக்குவரத்து திட்டப் பிரிவு அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 19/06/2024 மற்றும் 03/09/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில அனுப்பி அதில், சென்னை பெருநகர குடிநீர் வாரிய தலைமையகம், சென்னை பெருநகர காவல், சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் பிரிவு மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகியவற்றினை அணுகி தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், மனுதாரரின் மனுவினை சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலை ஆணையம் ஏற்கவில்லை. ஆகவே, பொதுத் தகவல் அலுலர்/ காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து வடக்கு, போக்குவரத்து திட்டமிடல் பிரிவு, சென்னை பெருநகரக் காவல் அலுவலகம், வேப்பேரி, சென்னை-7 அவர்கள் மனுதாரர் கோரிய அனைத்து தகவல்களையும் தொடர்புடைய அலுவலகங்களிலிருந்து பெற்று அதனை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 2 (இரண்டு) மாதங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகின்றது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 14316/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து வடக்கு,போக்குவரத்து திட்டமிடல் பிரிவு
சென்னை பெருநகரக் காவல், வேப்பேரி, சென்னை - 600 007.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு. M. விஜயன்
எண்.03/13, 4-வது தெரு
கருணாநிதி நகர், தண்டையார்பேட்டை
சென்னை-600 081.கைபேசி.9003033965.

RG/Sr.PC